வானவில்

VAANAVIL
ISSUE – 11 NOVEMBER 2011

இதழ் - 11கார்த்திகை 2011

# அரசு அறிக்கையுடன் புலிகள் தரப்பு அறிக்கையும் வெளிவர வேண்டும்!



இலங்கையில் பயங்கரவாதப் புலிகள் இயக்கத்தை ஒடுக்குவதற்காக நடந்த இறுதிப் போரின்போது (2009 மே மாதம்), அரச படைகள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று' போர்க் குற்றங்கள்' இழைத்ததாக, 'சர்வதேச சமூகம்' தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்திருக்கிறது.

அந்தக் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஆரம்பம் முதலே வன்மையாக மறுத்து வந்த போதிலும், பின்னர் 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு' (Lessons Learnt and Reconciliation Commission) என்ற பெயரில் விசாரணைக்குழு ஒன்றை அமைத்து, போரின் போது நடந்த சம்பவங்கள் சம்பந்தமாக பொதுமக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டது.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கை தற்பொழுது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது. விரைவில் அது நாட்டு மக்களின் முன்னாலும், உலகின் முன்னாலும் பகிரங்கப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதன் அடிப்படையில், போர்க்குற்ற மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அரசு அறிவித்துள்ளது.

பொதுவாகப் பார்க்கும்போது, சர்வதேசம் சொன்னால் என்ன சொல்லாவிட்டால் என்ன, ஒரு அரசு தன்நாட்டில் 30 வருடங்கள் நடைபெற்ற கோரயுத்தம் ஒன்றின் இறுதி உச்சகட்ட நிகழ்ச்சிகள் குறித்து ஆராய முன்வந்ததும், அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கத் துணிந்திருப்பதும் வரவேற்கப்பட வேண்டிய விடயங்கள்.

போர் என்று வரும்போது, அங்கு பல எல்லை மீறல்கள் நடப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம் என்பதை, முன்பு அமெரிக்கா தலைமையில் நடைபெற்ற கொரிய யுத்தம், வியட்நாமிய யுத்தம் என்பனவற்றின் போதும், அதே அமெரிக்கா தலைமையில் நடைபெற்று முடிந்த ஈராக் மற்றும் லிபிய யுத்தம், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆப்பானிஸ்தான் யுத்தம் என்பனவற்றின் போதும் காணக்கூடியதாக இருந்தது.

இவற்றில் உள்ள ஒரே வித்தியாசம், மேற்சொன்ன நாடுகளில் வெளிநாட்டுப்படைகள் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தன. ஆனால் இலங்கையில் நடைபெற்ற போரின் போது, சர்வதேச உதவிகள் இருந்தபோதும் அரச படைகளே மிகவும் கொடூரமான பயங்கரவாத இயக்கமொன்றை வெற்றிகரமாக முறியடித்துள்ளன என்பதாகும். மற்றும்படி யுத்தம் நடைபெற்ற இந்த நாடுகளில் எல்லாம் மனித உரிமை மீறல்கள் வகைதொகையில்லாமல் நடந்து, இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்பதே உண்மையாகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# போரில் இறந்தவர்களின் கணக்கெடுப்பு

யுத்த காலத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பாக கணக்கெடுப்பொன்று நடத்தவுள்ளதாக பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அத்துடன் 2009 ஆண்டு வன்னி இறுதி யுத்தத்தில் அரச படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக நிருபிக்கப்பட்டால், குறித்த படையினர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பாதுகாப்புச்செயலாளர் கூறியுள்ளார்.

பாதுகாப்புச்செயலாளரின் இந்த அறிவிப்புகள் உண்மையில் வரவேற்கப்பட வேண்டியதே. இலங்கை அரசாங்கத்தால் மாத்திரமே இலங்கையின் ஏறத்தாள 25 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை சரியாக கணக்கிட முடியும். ஆனால் யுத்த காலத்தில் இறந்தவர்கள் தொடர்பான கணக்கெடுப்பென பாதுகாப்புச்செயலாளர் அறிவித்திருப்பது, வன்னி இறுதி யுத்தத்தில் இறந்தவர்களின் கணக்கெடுப்பை மாத்திரம் குறிக்கோளாக கொண்டுள்ளது. அத்துடன் யுத்தமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசுக்கு வன்னி இறுதி யுத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை வெளியுலகுக்கு பகிரங்கப்படுத்துவதே பிரதானமானதாகவும் தெரிகின்றது.

சகல இனத்தையும் சேர்ந்த பொதுமக்கள், தமிழ் ஆயுத இயக்கப்போராளிகள், இலங்கை அரச படையினர், இந்திய அமைதிப்படையினர், அரசியல்வாதிகள், மாற்றுக்கருத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கல்விமான்கள், மனிதஉரிமைவாதிகள், துரோகிகள், சமூகவிரோதிகள் என பட்டியலிடக்கூடிய பல ஆயிரக்கணக்கான மனித உயிரிழப்புகளையும் பல ஆயிரம் கோடி பெறுமதியுள்ள அரச மற்றும் பொதுமக்களின் சொத்துக்களையும் இந்த உள்நாட்டு யுத்தத்தில் இலங்கை இழந்துள்ளது. இந்த இழப்புகள் அனைத்துமே கணக்கிலிடப்பட வேண்டும். ஒட்டுமொத்தமான உயிர் மற்றும் சொத்து இழப்பை பின்தள்ளிவிட்டு, தற்போதைய இலங்கை அரசை சிக்கலில் மாட்ட வன்னி இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்பை மாத்திரம் பிரதானபடுத்தி மேற்கத்தைய நாடுகளும் புலம்பெயர்ந்த புலிகளும் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

வன்னி இறுதி யுத்தத்தில் இறந்தவர்களின் தொகை 10,000 இலிருந்து 50,000 வரையென எழுந்தமானதாக சொல்லப்படுவது போலவே உள்நாட்டு யுத்தத்தில் ஒட்டுமொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் ஒரு இலட்சம், இரண்டு இலட்சமென வாய்க்கு வந்தபடி கூறப்படுகின்றது.

இலங்கையில் துப்பாக்கி சத்தங்கள் ஓய்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக அமைதி நிலவுகின்றது. இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் இலங்கை முழுவதிலும் வெற்றிகரமாக பல பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றது. அத்துடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றுதல், புலிப்போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற விடயங்களிலும் இலங்கை அரசாங்கம் தன்னால் முடிந்ததை செய்து வருகின்றது. யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவந்தது மாத்திரமன்றி, யுத்தத்தின் பின்னரும் திறம்பட செயற்படுகின்ற ஓர் அரசுக்கு நாட்டின் இனமோதல் ஏற்படுத்திய அனைத்து இழப்புகளையும் கணக்கிட முடியும்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மாத்திரமன்றி, 1971, 1989 ஆண்டுகளில் தென்னிலங்கையை பிரதான களமாகக்கொண்டு இலங்கை அரசு இயந்திரத்தை கைப்பற்றும் இலக்குடன் ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான ஆயுதக்கிளர்ச்சிகளும் இடம்பெற்றன. இவ்விரு கிளர்ச்சிகளின்போதும் பல ஆயிரக்கணக்கானவாகள் உயிரிழந்தனர். ஒவ்வொரு கிளர்ச்சிகளின் போதும் இழக்கப்பட்ட மனித உயிரிழப்பின் எண்ணிக்கையையும் 10,000 இலிருந்து உச்சரிக்கப்படுகின்றது. ஆனால் சரியான எண்ணிக்கையைக் கேட்டு யாருமே குரல் எழுப்புவதாகத் தெரியவில்லை.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான வரலாற்றில் நிகழ்ந்த ஆயுத மோதல்களின் பின்னணியையும், ஆயுத மோதல்களில் உயிரிழந்த அனைத்துத்தரப்பு மக்களினதும் சேதமாக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்களையும் ஆவணப்படுத்தி மக்களின் பார்வைக்கு முன்வைக்கப்பட வேண்டும். இந்த 'வரலாற்று ஆவணம்' தற்போதுள்ள இளஞ்சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் நிட்சயமாக ஒரு வரலாற்றுப்பாடமாக அமையும். *


**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# சோசலிச சீனாவின் மாபெரும் பொருளாதார சாதனை!

உலகின் எந்தவொரு நாட்டிலும் இதுவரை எட்டப்படாத பொருளாதார வளர்ச்சியை சோசலிச சீனா எட்டியுள்ளது. அதாவது சீன மக்கள் குடியரசின் GDP (PPP) per Capita வருடத்திற்கு 8.5 வீதமாக அதிகரித்துள்ளது. .இந்த அதிகரிப்பு கடந்த 30 வருடங்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இந்த GDP (PPP) per Capita என்பதின் சரியான கருத்து என்னவெனில், ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களினதும், சேவைகளினதும் பெறுமதியை, அதே ஆண்டிலிலுள்ள சராசரியான குடிசனத் தொகையால் பிரித்து வரும் பெறுமானமாகும்.

அத்துடன், சீனா தனது நாட்டுச் சனத்தொகையில் 630 மில்லியன் மக்களை, சர்வதேச ரீதியாக வரையறுக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழிருந்து மீட்டெடுத்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. இது உலகில் எந்தவொரு நாட்டிலும் எட்டப்படாத மிகப்பெரிய மனித மேம்பாட்டு நடவடிக்கையாகும்.

உலகின் பொலிஸ்காரனாகவும், பெரும் இராணுவ மேலாளனாகவும் திகழ்கின்ற அமெரிக்காவில், இன்றும்கூட 40 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர்! இவ்வளவிற்கும் அமெரிக்காவின் சனத்தொகை 300 மில்லியனுக்கும் சற்றுக் கூடுதலாகும். ஆனால் சீனாவின் சனத்தொகை 1300 மில்லியன் என்பதுடன், அது இன்னமும் ஒரு மூன்றாம் உலக நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், 2016ல் சீனாவின் பொருளாதாரம் அமெரிக்காவின் பொருளாதார நிலையை வந்தடையும் என்றும், 2019ல் அதன் GDP அமெரிக்காவினதிற்கு சமனாக வந்தடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**- காவலூர் பாலன்**

ஆதாரம்: People Daily – China

*

'இந்த உலகை அறிவு கொண்டு உணரமுடியும், புரிந்துகொள்ள முடியும். தத்துவம் அதற்கு உதவி செய்யும். இதுவரை பூத்த அத்தனை தத்துவங்களும் உலகை அறிவுபூர்வமாக விளங்கிக்கொள்ள முயற்சி செய்துள்ளன.'

-ஹெகல்

15ம் பக்கத்தொடர்ச்சி……..

புலிகள் அழிந்துபோய் விட்டதால் எவரிடமும் அறிக்கை கோர முடியாது என, இந்த விடயத்தில் தட்டிக்கழித்துவிட முடியாது. ஏனெனில் புலிகளின் தொடர்ச்சியாக, தற்பொழுது தமிழர்களுக்குத் தாம்தான் தலைவர்கள் என, புலிகளின் பல பிரிவுகள் சர்வதேச அரங்கில் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் நடாத்தும் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் இன்னமும் பிரபாகரனின் உருவப் படங்களும், புலிகளின் கொடிகளும்கூட தூக்கிப் பிடிக்கப்படுகின்றன. எனவே இவர்களை ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ முறைப்படி அணுகி, புலிகள் தரப்பு பதில் கூறும் கடப்பாட்டை ஏற்கச் செய்வதே முறை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்தப் பதில் கூறும் கடப்பாட்டிலிருந்து தப்பிவிட முடியாது. ஏனெனில் தமிழ் கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதுடன், புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் வலியுறுத்தி வந்தவர்கள். புலிகள் அரச படைகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை மட்டுமின்றி, தமிழ் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொண்டுவந்த நடவடிக்கைகளையும் கூட தமிழ் கூட்டமைப்பு ஒருபோதும் கண்டித்தது கிடையாது. அவ்வளவு தூரம் அவர்கள் புலிகளுடன் ஒன்றிப்போய் இருந்தவர்கள். அதுமட்டுமின்றி, புலிகள் அப்பாவிப் பொதுமக்களை தமது பாதுகாப்புக் கேடயமாக இறுதி யுத்த நேரத்தில் வைத்திருந்தபோது, ஒரு தடவை தன்னும் அவர்களை விடுவிக்கும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரவில்லை.

எனவே புலிகள் செய்த போர்க்குற்ற மீறல்களுக்கு, இன்று தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்பதாக மார்தட்டும் கடந்தகால புலி விசுவாசிகள் அனைவரும் பொறுப்பேற்பது அவசியமானது. அதைவிடுத்து மீண்டும் புலிகளின் பாதையில் அரசியல் செய்ய முற்படுவது அயோக்கியத்தனமானது. அதேவேளை அரசு தனது விசாரணை அறிக்கையை கூடிய வழரைவில் பகிரங்கப்படுத்துவதுடன், அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்வதும் அவசியம்.

*

# முகம் கழுவும் தந்திரிகள்!

- சன்னதன்



ஒன்றாயிருந்து உண்டியல் குலுக்கி, ஊரைச் சுருட்டி வாயில் போட்டவர்கள், பங்காளிச் சண்டையில் சொந்தச் செலவிலேயே ஆளுக்காள் சந்தி சிரிக்க வைக்கின்றனர்.

நாடு கடந்த நாடகக்காரரைப்பற்றி, 'தந்திரிகளின் மறுமுகம்' என்ற பெயரில் வாராவாரம் ஒரு பகுதியினர் 'வறுத்துக் கொட்டிக்' கொண்டிருக்க, அவர்களோ தாமே 'தேசியத் தலைவரின் பாதுகைக் காவலர்கள்' என்று ஒவ்வோரிடத்திலும் முகத்தைக் கழுவிக் கழுவிக் காட்டிக்கொண்டு திரிகிறார்கள்.

2011 நவம்பர் 06ஆம் திகதி கனடாவின் ரொறன்ரோ நகரிலுள்ள கொரியன் கலாச்சார மண்டபத்தில், அங்குள்ள இலங்கைத் தூதரகம் நடாத்திய தீபாவளி விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் எனக் கூறி முகம் காட்டிவிட்டு, இரண்டொரு சிறுவர்களையும் மண்டபத்துக்குள் அனுப்பி குழப்பம் விளைவிக்க முயற்சித்துவிட்டுப்போக, நவம்பர் 09ஆம் திகதி வெளிவந்த 'புலத்தில்' பத்திரிகை இப்படி எழுதுகிறது:

"....ஊடகவியலாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் ஊடாகவும், உருத்திரகுமாரனின் நண்பரான ஈ.என்.டி.எல்.எப். பரந்தன் ராஜன் வாயிலாகவும் நிபந்தனை விதித்து, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியா அனுப்பி வைத்த செய்திகளின் தொடர்ச்சியாக, 28-11-2008 அன்று நியூயோர்க்கில் இந்திய உப தூதரக வளாகத்தில் மருத்துவர் ஜெயலிங்கம் அவர்களை இந்தியத் தூதரகத்தின் இராசதந்திரிகளில் ஒருவரான எஸ்.பி.சிங் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தியாவின் உளவு அமைப்பான றோ நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கும் உருத்திரகுமாரனுக்கும் இடையில் காதும் காதும் வைத்தாற்போன்று நியூயோர்க்கில் நடைபெற்ற இரகசியச் சந்திப்பின் தொடர்ச்சியாகவே இக்கலந்துரையாடல் நிகழ்ந்தேறியிருந்தது..."

".....தமிழீழ தேசியத் தலைவருக்குப் பதிலாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் புதிய தலைவர் ஒருவரை உருவாக்குவதிலும், புலம்பெயர்ந்த தமிழர்களின் 'தலைரவராக' உருத்திரகுமாரனை பரிணமிக்க வைப்பதிலும், இந்தியா கொண்டிருந்த விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையிலான கருத்துக்களை, இந்திய இராசதந்திரியான எஸ்.பி.சிங் அவர்கள் வெளிப்படுத்தியதை புலித்தேவன் அவர்களுக்கு மருத்துவர் ஜெயலிங்கம் அவர்கள் எழுதிய அறிக்கை பட்டவர்த்தனமாக்கியது எனக்கூறின், அது மிகையல்ல. இதனை உறுதி செய்யும் வகையில் 08-12-2008 அன்று உருத்திரகுமாரனுக்கும் எஸ்.பி.சிங் அவர்களுக்கும் இடையில் நியூயோர்க்கில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது....."
தந்திரிகளின் மறுமுகம் - 31

இவ்வாறு இன்று வெளியிடப்படும் செய்திகள், இலங்கையில் புலிகளின் அழிவுக்கு முன்னர் மூன்றாண்டுகளுக்கு முன்னால் இடம் பெற்றவை. ஆயினும் நாடு கடந்த நாடகத்தின் தேர்தல் காட்சியில் பங்கேற்றவர்களும், இப்பொழுது எழுதுபவர்களும் ஒன்றாகத்தான் நடித்திருந்தனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

"உலகத் தமிழினமே எண்ணிப்பார்..."
எந்த நேரம், எந்தப் புற்றிலிருந்து, எந்தப் பாம்பு, உன்னைத் தீண்டுமோ?

பண மழை பொழிவிக்கும் கார்த்திகை மாதத்தில், பங்காளிச் சண்டையில் தடுமாறுகிறார்கள் உண்டியல்காரர்கள்.
"மாவீரர் பெற்றோரே மனம் சோர வேண்டாமே,
ஒரு பிள்ளை போனாலும் மறு பிள்ளையும் உண்டு..."
என்று இனியும் பாட முடியாது.

"களமாடவில்லை நீ - என்னடா பேரன்
காசை உழைத்தேனும் புலி கையில் கொடடா"
என்று புலம்பெயர் பேரப்பிள்ளைகளுக்கு கட்டிய தலைப்பாகையை, இலங்கையைத் தெரியாத சிறுவர்களின் தலையில் கட்டுவதில் குறியாக இருக்கிறார்கள். ஏற்கெனவே கொடுத்துச் சிவந்து நிற்கும் பெற்றோர் குழம்பிப் போய் இருக்கிறார்கள். இனியும்,
"நீ உறங்கினால் வரலாற்றில்
யாருன்னை மன்னிப்பார்...."
*

# வோல் ஸ்றீற் (Occupy Wall Street) கிளர்ச்சி ஏழை அமெரிக்கர்களின் கொந்தளிப்பே!




'வோல் ஸ்றீற்றை இடம் கொள்ளுதல்' (Occupy Wall Street) 2011 செப்ரெம்பர் 17ம் திகதி ஆரம்பிக்கப்பட்டபோது, அதில் சில டசின் ஆர்ப்பாட்டக்காரர்களே பங்குபற்றினர். ஆனால் இன்றோ அது 80க்கும் அதிகமான (பெரும்பாலும் வளர்ச்சியடைந்த மேற்கத்தைய முதலாளித்துவ) நாடுகளுக்குப் பரவியுள்ளதுடன், அதில் லட்சோப லட்சம் மக்கள் பங்கேற்கின்றனர். ஆரம்பத்தில் இந்த ஆர்ப்பட்டக்காரர்களை குழப்பம் விளைவிக்கும் காடையர் கூட்டம் என, அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் தலைவர் எரிக் கன்ரோர் (Eric Cantor) ஓரம் கட்டினாலும், பின்னர் நாடு முழுவதும் மக்கள் மத்தியில் ஏமாற்றமும் இயலாத்தன்மையும் நிலவுகின்றதென்றும், அக்கோபத்தின் ஒரு வெளிப்பாடே 'வோல் ஸ்றீற்றை இடம் கொள்ளுதல்' என்றும் ஒத்துக் கொண்டார்.

மேலும் அதிதீவிர வலதுசாரிகளும், இப்போராட்டத்தை ஆரம்பம் முதல் எதிர்ப்பவர்களுமான நியோ கொன்சவேர்டிக் (Neo Conservative) காரர்கள் எதிர்பார்த்தது போல், இப்போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் எந்தக் குழப்பங்களிலும் ஈடுபடாமல் அமைதியாகத் தங்கள் குறைகளை வாயாலேதான் சொன்னார்கள். அல்லது இன்னும் சொல்லப்போனால், காந்தி மற்றும் மார்டின் லூதர் கிங் போன்றோரின் அகிம்சைப் பாதையையே பின்பற்றினார்கள்.

'ஃபினான்சியல் ரைம்ஸ்'சின் (Finnancial Times) ஆசிரியர் தலையங்கத்தில் இதுபற்றி மிக அழுத்தம் திருத்தமாகக் கூறியது போல் "இப்போராட்டத்தின் அடிப்படை அழைப்பாணை என்னவென்றால், மூலதனத்தின் பாரபட்சமற்ற நியாயமான பங்கீடாகும். மேலும் இன்று இக்கோரிக்கை இனிமேலும் தவிர்க்க முடியாதது என்பதாகும்". இதுபற்றி 'ஃபினான்சியல் ரைம்ஸ்' மேலும் குறிப்பிடுகையில்" வளர்ந்து வரும் சமூக ஏற்றத்தாழ்வு, உயர்ந்து செல்லும் தாங்க முடியாத வறுமை என்பனவற்றுக்காகத் தங்களை அர்ப்பணித்துச் செயல்பட்டு, இனியும் வறுமையைத் தாங்க முடியாது என்ற மக்களின் நிலை என்பனவே இக்கோபாக்கினியின் வெளிப்பாடாகும்".

இவ்வாறு வறுமைக்கும் செல்வத்துக்கும் இடையிலான பாரிய இடைவெளி அமெரிக்காவில் கடந்த 30 வருடங்களில் அதன் உச்சத்தைத் தொட்டுவிட்டது. மிகச் செல்வந்தர்களான 10 வீதத்தினர் இக்காலகட்டத்தில் மேலும் மேலும் செல்வம் ஈட்டிக் கொண்டிருக்க, மீதமான 90 வீதத்தினர் தொடர்ச்சியான இழப்பையே கண்டு வந்துள்ளனர். இன்று அமெரிக்காவின் 300 மில்லியன் (30 கோடி) மக்கள் தொகையில் 46 மில்லியன் (4 கோடி 60 இலட்சம்) மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். அமெரிக்காவின் மிகப்பெரிய பணக்காரர்களான 1 வீதத்தினரின் வருமானம், அங்கு வறுமைக்குள் வாழும் 60 வீதமானோரின் வருமானத்திற்குச் சமமாகும். அதேவேளையில் இந்த 1 வீதத்தினரின் சொத்து, அங்குள்ள 90 வீதமானோரின் சொத்துக்குச் சமமாகும்.

**தீப்போறி**

இன்று அமெரிக்க மக்கள் மத்தியில் உள்ள முக்கியமான கேள்வி என்னவெனில், 'வங்ரோத்தாகிப் போன வங்கிகளுக்கு நிதியுதவி அளித்து அவற்றைக் கைதூக்கிவிட்டதுடன், அந்த வங்கிகள் திவாலாகிப் போவதற்குக் காரணமான அந்த வங்கிகளின் உயரதிகாரிகளுக்கும் போனஸ் வழங்கிய அமெரிக்க அரசு, சாதாரண மக்களான நாங்கள் வேலைகளையும் வீடுகளையும் இழந்ததிற்கு என்னத்தை வழங்கியது?' என்பதாகும்.

அதன் காரணமாக தற்பொழுது அங்கு நடைபெறும் 'வோல் ஸ்றீற்றை இடம் கொள்ளும்' போராட்டம் ஒரு வர்க்கப் போராட்டமாகும். அதனால்தான் பழமைவாத மிகப் பிற்போக்குக் கட்சியான குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்குப் போட்டியிடுபவர்களில் முன்னணியிலுள்ள மிற் ரொம்மி (Mitt Rommy), போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களைப் பார்த்து, ''ஓர் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்'' எனக் குற்றஞ்சாட்டுகிறார்.

அதிகூடிய சுரண்டலைத் தொடர்வதற்காக உலகமயமாக்கலின் கீழ் மிகப்பெரிய மேற்கத்தைய பகாசுரக் கம்பனிகள் யாவும் தமது தொழிற்சாலைகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு இடம் பெயர்த்ததின் மூலம், தமது சொந்த நாட்டுத் தொழிலாளர்களை வீதிக்குத் துரத்தியதுடன், அவர்களை வறுமைக்குள்ளும் தள்ளியுள்ளார்கள். இவர்களது பிள்ளைகளான இளம் சமுதாயமே இன்று இலண்டன், பிரான்ஸ், கிறீஸ், ஸ்பெயின், இஸ்ரேல் எனப் பல நாடுகளிலும் கிளர்ந்தெழுகிறார்கள்.

இவற்றில் மூலதன வியாபாரமே மிக மோசமாக மக்களைச் சூறையாடுவதிலும் மிகப்பாரிய கிரிமினல் ஏமாற்று நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது. அண்மையில் அமெரிக்காவில் 'உள்ளக வியாபாரத்தில்' ஈடுபட்ட இலங்கைத் தமிழரான ராஜ் ராஜரத்தினம் என்பவருக்கு அமெரிக்க நீதிபதியொருவர் 11 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்ததுடன், ''எங்கள் வியாபாரக் கலாச்சாரத்தில் வைரஸ் கிருமி நுழைந்துவிட்டது'' என்றும் சாடியுள்ளார்.

கனடிய நிதியமைச்சர் ஜிம் ∴பிளாகெற்றி (Jim Flaherty) கூட இன்று நிலவும் மிக மோசமான சுரண்டல் நிலைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''நியாயமான வருமானப் பங்கீடென்பது மிக முக்கியம். ஆனால் இன்று மிகச்சிறிய குழு மிகப்பெரிய வருமானத்தைப் பெறும் அதேவேளை, பெரும்பான்மையானோர் அவ்வாறான சந்தர்ப்பம் இல்லாமல் உள்ளார்கள்''

கனேடிய வங்கியின் (Bank of Canada) ஆளுநர் மார்க் கார்னி (Mark Carney) ரொறன்ரோ நகரின் சென்.ஜேம்ஸ் பூங்காவில் நிலை கொண்டுள்ளவர்களின் கிளர்ச்சியை நியாயப்படுத்துகிறார். கனடாவில் நிலவும் பாரிய வருமான இடைவெளிக்கு உதாரணமாக பின்வரும் நிலைமையை அவதானிக்கலாம். 2005ல் ஒரு சராசரி கனேடியத் தொழிலாளியின் வருட வருமானம் 38,010 டொலர்களாகும். ஆனால் அதியுயர்ந்த சம்பளம் பெறும் ஒரு தலைமை நிர்வாக அதிகாரி (Chief Executive Officer) வீட்டிற்குக் கொண்டு சென்றது 74.8 மில்லியன் டொலர்களாகும். இது தொழிலாளியின் வருமானத்தைப் போல 196 மடங்காகும்.

இன்று Occupy Wall Street, Occupy New York, Occupy Toronto என 80க்கும் மேற்பட்ட நாடுகளில் நடைபெறும் இப்போராட்டம் புதிய தலைமுறை இளைஞர்களின் கிளர்ச்சியாக இருந்த போதிலும், அதற்கு ஒரு தத்துவார்த்த வழிகாட்டலோ, ஸ்தாபன அமைப்பு என்ற பலமோ இல்லாத நிலையில், அதிகார வர்க்கத்தால் போராட்டக் களங்களான வீதிகள், சதுக்கங்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து பலவந்தமாக விரட்டப்படுகிற நிலையே இருக்கின்றது.

இதுசம்பந்தமாகக் கருத்து வெளியிட்ட உலகத்திலுள்ள மிகமுக்கியமான பொருளாதார நிபுணர்களில் ஒருவரான ஜெப்ரி சச்ஸ் (Jeffery Sachs) பின்வருமாறு கூறுகிறார்: ''எல்லோருக்கும் தெரியும், பூங்காக்களில் நடைபெறும் இந்த இளைஞர்களின் கிளர்ச்சி அமெரிக்காவில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவராதென்று. ஆனால் கடந்த 30 வருடங்களாக உறங்கிக் கொண்டிருந்த அமெரிக்க மக்களை தனது சில வாரப் போராட்டத்தினால் அது உசுப்பிவிட்டுள்ளது. இந்த நிகழ்வு அமெரிக்கர்களை அவர்களது பழுதுபட்ட அரசியல் அமைப்பு முறை பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. இது சமூக மாற்றத்திற்கான ஆரம்பமே. இது தொடர்ச்சியில் உரிய செயல்பாட்டிற்று வரும்''.

அவர் தனது தீர்வை சிறப்பாகவும் தெளிவாகவும் பின்வருமாறு முன்வைக்கிறார்:

1. திட்டமிடப்பட்ட கொள்கை
2. அரசியல் அதிகாரத்துக்கான இயக்கம்

ஆனால் மேற்குறித்த செயற்பாடுகளிலிருந்து நீண்டதூர இடைவெளியில் நாம் இருக்கின்றோம் என்றும் குறிப்பிடுகின்றார்.

அவர் 'நியூயோர்க் மகசீன்' (New York Magazine) சஞ்சிகையில் தான் எழுதிய கட்டுரையில், இந்த நிலை அமெரிக்காவிற்கு ஏற்படத் தொடங்கியது ஜனாதிபதி ரேகனின் காலத்திலாகும் என்று குறிப்பிடுகின்றார். அமெரிக்க மக்களினதும் அரசினதும் செயற்பாட்டைச் சீரழிக்கும் 1 வீதமான முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளின் செயற்பாட்டுக்கு அவரே வழிவகுத்தார் என ஜெப்ரி குறிப்பிடுகிறார்.

இன்றுள்ள அமெரிக்க அரசு பரந்துபட்ட அமெரிக்க மக்களின் அரசல்ல என்று கூறும்

அவர், இன்று அமெரிக்காவில் அரசியல் அதிகாரம் என்பது மிகச்சிறிய இரு குழுக்களுக்கிடையே சிக்குண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஒன்று பாரிய நிதியைக் கையாளும் வோல் ஸ்றீற், மற்றது அமெரிக்க இராணுவம். ஆனாலும் வோல் ஸ்றீற் - உலக நிதி நிறுவனம்தான், இராணுவத்தைக் காட்டிலும் கூடிய அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துள்ளது - இவ்வாறு குறிப்பிடும் ஜிப்ரி, தனது கட்டுரையின் இறுதியில் அமெரிக்க அரசை – ஜனநாயகக் கட்சியை வோல் ஸ்றீற்றுக்கு விற்றது ஜனாதிபதி பில் கிளின்டன் (Bill Clinton) எனக்குறிப்பிட்டு முடிக்கின்றார்.

**இக்கட்டுரைக்கான ஆதாரங்கள்:**

- Toronto Star
- Jeffery Saches Books:
    1. The End of Poverty
    2. The Prices of Civilization: Economics and Ethics after the Fall
- http://occupywallst.org/

*

## இனி 200 ஆண்டுகளுக்குத் தமிழர்களால் போராடவே முடியாது!

### பேராசிரியர் சிவத்தம்பி கூறிச் சென்றிருக்கிறார்!!

2002-ம் வருடம் கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள அடைசலான ஒரு ஃபிளாட்டில் அவரைச் சந்தித்துப் பேசியது நினைவுக்கு வருகிறது. அப்போது அவர் பிரபாகரனை மிகவும் புகழ்ந்து பேசினார். "தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட சிங்களப் பேரினவாத அடக்குமுறைகள், ராணுவத் தாக்குதல்களை எல்லாம் எதிர்த்து நின்று களத்தில் போராடும் ஒரே அணியாக விடுதலைப்புலிகள் இருக்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம் தலைமை தாங்கும் பிரபாகரன்தான்" என்றார்.

"ஒருவேளை எதிர்காலத்தில் பிரபாகரனும், விடுதலைப்புலிகள் இயக்கமும் ஒடுக்கப்பட்டால் என்ன ஆகும்?"

"அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு ஈழத்தமிழர்களால் வலிமையாகப் போராடவே முடியாத நிலை உருவாகும்"

(பேராசிரியர் கா.சிவத்தம்பி காலமான நேரத்தில், அவர் பற்றிய நினைவுக் குறிப்புகளை 'குமுதம்' இதழில் எழுதிய கிருஸ்ணா டாவின்ஸி இவ்வாறு கூறியிருக்கிறார்.) *

## அழிப்பும் அளிப்பும்!

வடக்கு மாகாணத்திலுள்ள 240 கோவில்களுக்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதியுதவியளித்துள்ளது. இதை நேரடியாக ஆலய பரிபாலகர்களிடம் கையளிப்பதற்காக, இலங்கைப் பிரதமர் டி.எம். ஜெயரத்ன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். இதற்கான நிகழ்ச்சி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது.

கடந்த 30 ஆண்டுகாலப் போரின்போது, வடக்குக் கிழக்கிலுள்ள பல கோவில்களுக்குச் சொந்தமான பெரும்தொகை நிதியை 'விடுதலைப் போராட்டத்துக்கு' என, புலிகள் பலவந்தமாகப் பறித்தெடுத்ததை அனைவரும் அறிவர். அவ்வாறு கோவில் நிதியைக் கொடுக்காது மறுப்புத் தெரிவித்த பல கோவில் நிர்வாகிகளை, புலிகள் சிறையில் அடைத்துச் சித்திரவதையும் செய்தனர். சில கோவில்களின் மூலஸ்தானத்தை தமது மறைவிடமாகவும், ஆயுதங்கள் மறைத்து வைக்கும் மறைவிடங்களாகவும்கூட புலிகள் பயன்படுத்தினர்.

பல புலம்பெயர் நாடுகளில் இன்றும்கூட மக்கள் கஸ்டப்பட்டு உழைக்கும் பணத்தைச் சுரண்டுவதற்காக, புலிகள் பல தெய்வங்களின் பெயர்களில் பல்வேறு கோவில்களை நடாத்தி வருகின்றனர். புலிகள் இவ்வாறு செய்துகொண்டு, இலங்கை அரசு கோவில்களை இடிக்கின்றது எனப் பொய்ப்பிரச்சாரம் வேறு செய்து வந்தனர். தற்பொழுது இலங்கை அரசின் வடக்குக் கோவில்களுக்கான நிதியுதவி, புலிப் பினாமிகளின் பொய்யுரைப்புகளுக்கு வேட்டு வைத்துள்ளது. *

## கறி முருங்கையின் பயன்பாடு

முருங்கை இலையில் தயிரில் உள்ளதைப் போன்ற இரு மடங்கு புரதச்சத்து உள்ளது. வாழைப்பழத்தில் உள்ளதைப் போன்ற மூன்று மடங்கு பொட்டாசியம் உள்ளது. பசும்பாலில் உள்ளது போல நான்கு மடங்கு கல்சியம் உள்ளது. கரட்டில் உள்ளதைப் போன்ற நான்கு மடங்கு விற்றமின் உள்ளது. தோடம்பழத்தில் உள்ளதைப் போன்ற ஏழு மடங்கு விற்றமின் உள்ளது.

மேலும் உலக உணவு ஸ்தாபனத்தின் ஆராய்ச்சியின்படி, இது நிலத்தடி நீரைச் சுத்தம் செய்கின்றது. இத்தகைய பயன்பாடுகள் காரணமாக, ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள பல நாடுகள் முருங்கைச் செய்கைக்கு அதிக ஊக்கமளித்து வருகின்றன. *

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பல ஆண்டுகளாக நீடித்து வந்த கொரடுமோன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் நோக்குடன் நோர்வே நாடு சுமார் ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலம் இலங்கையில் அனுசரணை முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை அனைத்துலகமும் நன்கறியும். இந்த முயற்சியை முன்னெடுப்பதற்காக அந்நாடு அங்குள்ள சிறிய கட்சியொன்றின் தலைவரும், அமைச்சருமான எரிக் சோல்கெய்ம் என்பவரை நியமித்திருந்ததும் அனைவரும் அறிந்த விடயம்.

நோர்வேயின் இந்தச் சமாதான தூதுவர் எண்ணற்ற தடவைகள் இலங்கை யுத்தத்தில் ஈடுபட்டு வந்த இரு தரப்பினருடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதுடன், ஒவ்வொரு தடவையும் இந்தியாவுக்கும் சென்று பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை விளக்கி வந்தார்.



அத்துடன் நோர்வேயின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த எரிக் சோல்கெய்ம் தனது கருத்துகளையும் பி.பி.சி. செய்திச் சேவைக்கூடாக வெளியிட்டுள்ளார்.

நோர்வேயின் அறிக்கையையும், சோல்கெய்ம்மின் கருத்துக்களையும் இலங்கை அரசும் புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிப் பினாமிகளும் தத்தமது நிலைப்பாடுகளிலிருந்து விமர்சித்தும் கண்டித்துமுள்ளனர். பரபரப்பையும் சிலுசிலுப்பையும் ஏற்படுத்தி பணம் சம்பாதிப்பதிலும், மக்களைத் தவறாக வழி நடாத்துவதிலும், எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்கும் முதலாளித்துவ ஊடகங்கள், நோர்வேயின் அறிக்கையை வழமைபோல தலைப்புச் செய்திகளாக்கிவிட்டு

# இலங்கைத் தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய
# எரிக் சோல்கெய்ம்மின் ஆலோசனைகள்!

அத்துடன் தாய்லாந்து, யப்பான், சுவிஸ்லாந்து, நோர்வே எனப் பல நாடுகளில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி உயர்மட்டச் சந்திப்புகளையும் நோர்வே ஏற்பாடு செய்தது.ஆனாலும் நோர்வேயின் அனுசரணையுடன் நடந்த இப்பேச்சுவார்த்தைகள் உருப்படியான பயன் எதையும் தரவில்லை. இறுதியில் தோல்வியிலேயே முடிந்தது. அதற்குப் பிரதான காரணம் புலிகளின் விட்டுக்கொடுக்காத போக்கும், புதிது புதிதாக அவர்கள் முன்வைத்த நிபந்தனைகளும்தான் என்பதை, நோர்வே உட்பட அனைவரும் அறிவர். இப்பொழுது நோர்வே அரசு தனது சமாதான முயற்சிகள் தோற்றதற்கான காரணங்கள், அது சம்பந்தமான தனது கருத்துகள் மற்றும் எதிர்காலத்தில் தமிழர்களும் இலங்கை அரசும் செய்ய வேண்டியவை என்பன குறித்து ஒரு நீண்ட அறிக்கையை. வெளியிட்டுள்ளது.

ஓய்ந்துவிட்டன. நோர்வேயின் அறிக்கையிலுள்ள முக்கியமான விடயங்களை – குறிப்பாக சோல்கெய்ம் தமிழர்களையும் அரசையும் நோக்கிச் சொன்ன முக்கியமான கருத்துகளுக்கு இந்த ஊடகங்கள் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

**விவேகானந்தன்**

இலங்கை ஊடகங்களைப் பொறுத்தவரை அவ்வாறு செய்தமைக்கு ஒரு காரணமுண்டு. அதாவது நோர்வேயின் அனுசரணை முயற்சியை ஆரம்பம் முதலே இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்கி வந்துள்ளனர். அந்தச் சந்தேகங்கள் இரண்டு வகையானவை. ஒன்று, நோர்வே மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளின் ஒரு கருவியாக இலங்கைப் பிரச்சினையில் நுழைக்கப்பட்டுள்ளது என்ற கருத்தாகும்.

இரண்டாவது, நோர்வே புலிகளுக்குச் சார்பாகச் செயல்படுகின்றது என்பதாகும். உண்மையில் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கமே நோர்வேயை இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு அழைத்தது என்ற போதிலும், நோர்வேயின் செயற்பாடுகள் இலங்கை மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தும் வகையிலேயே இருந்து வந்துள்ளன.

உண்மையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தமே ஓரளவு நீதியான, நடைமுறைச் சாத்தியமான தீர்வு ஒன்றைக் கொண்டு வந்தது. ஆனால் அன்று நிலவிய அமெரிக்க – சோவியத் பனிப்போர் காரணமாக, சோவியத் யூனியனுக்குச் சார்பான இந்தியா மேற்கொண்ட அந்த ஒப்பந்தத்தைச் சீர்குலைத்து, இலங்கையில் தமது காலை ஊன்றுவதற்கு ஏகாதிபத்திய சக்திகள் தீர்மானித்தன. அதற்கு விடுதலைப் புலிகளைப் பகடைக் காய்களாக உபயோகிக்கலாம் என அவை கண்டு கொண்டன. புலிகளின் அதிகார வெறி அதற்குப் பொருத்தமாக இருந்தது. எனவே புலிகள் அதனடிப்படையில் அந்த ஒப்பந்தத்தை நிராகரித்ததுடன், இந்திய அமைதிப்படையுடன் யுத்தத்திலும் ஈடுபட்டனர்.


ஆனால் அந்த யுத்தத்தில், புலிகள் இந்தியப் படையினால் முற்றுமுழுதாக அழிக்கப்படும் நிலையில் இருந்தனர். இந்தக் கட்டத்தில் புலிகள் தாம் சொல்லி வந்த அடிப்படைக் கொள்கைளைக்கூட மறந்து (சிங்களப் பேரினவாதத்தை எதிர்ப்பது, தமிழீழம் அமைப்பது) மோசமான சிங்களப் பேரினவாதியும், ஏகாதிபத்திய விசுவாசியும், அன்றைய ஜனாதிபதியுமான ஆர்.பிரேமதாசவின் உதவியை நாடி, இந்திய அமைதிப்படையை நாட்டைவிட்டு வெளியேற வைத்துத் தப்பிப் பிழைத்துக் கொண்டனர். இந்த ஏற்பாட்டைச் செய்வதில், ஏகாதிபத்தியத் தரகரும், புலிகளின் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் முக்கிய பங்கு வகித்தார்.

புலிகள் இந்திய அமைதிப்படையை வெளியேற்றியதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவாகிய காலத்தில் இந்தியப் பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தியை, இந்தியாவில் வைத்து – அதுவும் தமிழக மண்ணில் வைத்து மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்தனர். அதன் மூலம் இந்தியாவை இலங்கைப் பிரச்சினையிலிருந்து ஒதுங்க வைத்து, இலங்கையின் கள நிலவரத்தை ஏகாதிபத்தியத் தலையீட்டுக்குச் சாதகமான முறையில் 'துப்பரவு' செய்து வைத்தனர்.

அதன்பின்னர், புலிகள் வடபகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பிரேமதாச அரசுடன் கடுமையான யுத்தத்தை ஆரம்பித்ததுடன், இறுதியில் பிரேமதாசவையும் கொலை செய்தனர். அதன் பின்னரும் ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு விசுவாசமானவர் ஒருவரை இலங்கையின் ஜனாதிபதியாகக் கொண்டுவர முயன்ற போதிலும், 17 வருட ஐ.தே.க அரசின் கொடுமை தாங்காத இலங்கை மக்கள் சந்திரிகாவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியக் குடும்பத்திலிருந்தும், அரசியலிலிருந்தும் வந்த சந்திரிகா, இனப்பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வைக் காண விரும்பினார்.

ஆனால் ஏகாதிபத்திய சக்திகள் அதற்கு இடமளிக்கத் தயாராகவிருக்கவில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக முரண்பட்ட, ஆனால் இனவாத அடிப்படையில் ஒன்றுபடக்கூடிய ஐ.தே.க, ஜே.வி.பி, புலிகளால் வழிநடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி, ஹெல உறுமய, விக்கிரபாகு கருணரத்ன என அனைவரையும் ஓரணியில் திரட்டியதுடன், சந்திரிகாவின் அரசிலிருந்த சிலரையும் உடைத்தெடுத்து, சந்திரிகாவின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்குக் குழி பறித்தனர். அத்துடன் புலிகள் முன்னெப்போதையையும்விட மிகவும் உக்கிரமான முறையில் அரச படைகள் மீதான தாக்குதலையும் ஆரம்பித்தனர்.

இவ்வாறான ஒரு கடுமையான சூழலை உருவாக்கி சந்திகாவுக்கு நெருக்கடியைக் கொடுத்து, சர்வதேச மத்தியஸ்தம் ஒன்றுக்குச் செல்லுமாறு அவரை நிர்ப்பந்தித்தனர். அதன் விளைவாகவே சந்திரிகா நோர்வேயை அனுசரணையாளராக அழைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் நோர்வே இலங்கை அரசுடனும் புலிகளுடனும் சமமான பாரபட்சமற்ற செயற்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும், ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கங்கள் காரணமாகவும், நோர்வே இலங்கையின் வடக்குக் கிழக்கின் கரையோரப் பகுதிகளில் கொண்டிருந்த பொருளாதார அபிலாசைகள் காரணமாகவும், ஒரு பக்கச் சார்பாக – அதாவது புலிகள் சார்பாகச் செயற்படத் தொடங்கியது என்பதே, இலங்கையின் பெரும்பாலான அரசியல் நோக்கர்களின் அபிப்பிராயமாகும்.




இந்தச் சூழ்நிலையில்தான், 2002ல் ஏகாதிபத்திய சார்பான ஐக்கிய தேசியக் கட்சி, ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மேற்குலகின் ஆலோசனையுடனும் நிர்ப்பந்தத்துடனும், ரணிலின் அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் சமாதான ஒப்பந்தமொன்றை நோர்வே நிறைவேற்றியது.

இந்தச் சமாதான ஒப்பந்தம் மூலம், புலிகளுக்கு இலங்கை அரசிடமிருந்து பல விட்டுக் கொடுப்புகளையும் சலுகைகளையும் நோர்வே பெற்றுக் கொடுத்தது. அத்துடன் இந்தச் சமாதான ஒப்பந்த காலத்தை, புலிகள் தம்மை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலப்படுத்திக் கொள்வதற்கு நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி புலிகளின் பிரமுகர்கள் இராஜதந்திர கடவுச் சீட்டுக்களைப் பெற்று, உலகம் முழுவதும் பயணம் செய்து, புலம்பெயர் தமிழர்களிடம் பெரும் தொகை பணத்தை வசூல் செய்ததுடன், நவீன ஆயுதங்களையும், தொழில்நுட்ப சாதனங்களையும், விமான உதிப்பாகங்கள், அதிவேகப் படகுகள், மருந்து வகைகள் எனப் பலவற்றை வாங்கிக் குவித்தனர்.

நோர்வேயும் தனது பங்குக்கு புலிகளுக்கப் பல உதவிகளைச் செய்துள்ளமை இரகசியமானதல்ல. இந்தக் காலத்தில் புலிகளின் சில நூறு முக்கிய உறுப்பினர்கள் கல்வி கற்பதற்கு என குறிப்பிட்ட கால அட்டவணை விசா பெற்று நோர்வே செல்வதற்கு நோர்வே அரசு ஏற்பாடுகள் செய்து கொடுத்தது. அவர்களில் பலர் கல்வி கற்கும் காலம் முடிந்தும்கூட, நாடு திரும்பாமல் நோர்வேயிலேயே தங்கியிருப்பதற்கு நோர்வே அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் நோர்வே புலிகளுக்கு இந்த சமாதான ஒப்பந்த காலத்தில் பெருந்தொகைப் பணம், தொலைத் தொடர்புக் கருவிகள் வழங்கியதாகவும், புலிகளுக்கு இராணுவ ரீதியான பயற்சிகள்கூட வழங்கப்பட்டதாகவும் இலங்கையிலுள்ள சில அமைப்புகளால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அதுமாத்திரமின்றி, அமெரிக்காவும் கனடாவும் பிரித்தானியாவும் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தமது நாடுகளில் தடைசெய்து, அதை இன்று வரையும் தொடர்கையில்; நோர்வே அவ்வாறு செய்யாததுடன், இலங்கை அவ்வாறு செய்யும்படி பல தடவை வலியுறுத்தியும் நோர்வே புலிகளைத் தடை செய்வதற்கு இன்றுவரை மறுத்தே வருகின்றது. புலிகளில் இரண்டு சர்வதேசப் பிரிவுகளில் ஒன்றான, இன்னமும் வன்முறைப் பாதையை தீவிரமாக வலியுறுத்தி வருகின்ற குழுவுக்குத் தலைமை தாங்குகின்ற நெடியவன் என்பவர், நோர்வேயைத் தளமாகக் கொண்டுதான் தற்பொழுதும் செயற்பட்டு வருகின்றார்.

அடுத்த இதழில் தொடரும்…

# இஸ்ரேலிய – ஏகாதிபத்திய எதிர்ப்பை மீறி யுனெஸ்கோவில் பலஸ்தீனத்துக்கு உறுப்புரிமை!



- காவலூர் பாலன்

அண்மையில் நடைபெற்ற, ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியமான துணை அமைப்புகளில் ஒன்றான ஐ.நா.கல்வி விஞ்ஞான கலாச்சார சங்கத்தின் (UNESCO) கூட்டத்தில், பலஸ்தீனம் அதன் 195வது உறுப்பு நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பலஸ்தீனத்தை அங்கத்துவ நாடாக ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவாக 107 நாடுகளும், எதிராக 14 நாடுகளும் வாக்களித்தன. 52 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இஸ்ரேலுக்கு ஆதரவான ஏகாதிபத்திய முகாமிலுள்ள முக்கிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ், பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்து பெருமைக்குரிய பிரான்சிய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

பலஸ்தீன மக்களைப் பொறுத்தவரை இந்த அங்கத்துவம் ஒரு மாபெரும் வெற்றியாகும். இந்த வெற்றியைத் தொடர்ந்து, ஐ.நாவின் ஏனைய 16 துணை அமைப்புகளிலும்கூட பலஸ்தீனம் அங்கத்துவம் பெறக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது. அதன் மூலம் பலஸ்தீன மக்கள், இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து முற்றுமுழுதாக விடுபட்ட, தமது சுதந்திர நாட்டை உருவாக்கும் இலட்சியக் கனவை வெகு விரைவில் நனவாக்க முடியும்.

பலஸ்தீனம் யுனெஸ்கோவின் அங்கத்துவ நாடாக ஏற்கப்படுவதைத் தடுக்க இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளும், அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டதுடன், பெருவாரியான நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவளித்ததின் மூலம் அவர்களின் முகத்தில் கரியையும் பூசியுள்ளன. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா யுனெஸ்கோவுக்கான தனது 80 மில்லியன் நிதியுதவியை நிறுத்த வேண்டிவரும் என எச்சரித்துள்ளது. இந்த நிதி யுனெஸ்கோவின் வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 22 வீதமாகும். இதன் மூலம் சுதந்திர இறைமையுள்ள நாடுகள், ஆக்கிரமிப்புக்குள்ளான ஒரு நாட்டுக்கு வழங்கும் ஆதரவை அமெரிக்கா பொறுக்க முடியாமல் ஊதாசீனம் செய்துள்ளது. அதேநேரத்தில் மறுபக்கத்தில் ஈராக்கிய, ஆப்கானிஸ்தானிய, லிபிய மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மீட்கத் தான் பாடுபடுவதாக நீலிக்கண்ணீர் வடிக்கிறது.

இதேநேரத்தில் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகள், பலஸ்தீனம் யுனெஸ்கோவில் அங்கத்துவம் பெற்ற ஆத்திரத்தில், அதற்கான நிதியைத் தடை செய்துள்ளதுடன், பலஸ்தீனப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மறுபக்கத்தில், இனிமேல் இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாயின், இஸ்ரேல் பலஸ்தீனப் பகுதிகளில் குடியேற்றங்கள் செய்வதை நிறுத்த வேண்டும் என, பலஸ்தீன அதிகாரசபை முன் நிபந்தனை வித்தித்துள்ளது. கடந்த காலங்களில் இஸ்ரேல் ஒரு பக்கத்தில் பலஸ்தீனத்துடன் பேச்சுவார்த்தையை நடாத்திக் கொண்டு, மறுபக்கத்தில் தந்திரமாக யூதக் குடியேற்றங்களையும் மேற்கொண்டு வந்ததால், பலஸ்தீன அதிகார சபை இத்தகைய நிபந்தனையை விதித்துள்ளது. அதன் இந்த நிலைப்பாட்டை பலஸ்தீன மக்கள் ஏகமனதாக ஏற்றுள்ளனர்.

இஸ்ரேலும் அமெரிக்கா போன்ற அதன் ஏகாதிபத்திய எஜமானர்களும் என்னதான் மத்திய கிழக்குப் பிரச்சினையில் சமாதான வேடம் போட்டாலும், அவர்களின் முழு நோக்கமும் பலஸ்தீன சுதந்திர அரசு உருவாவதைத் தடுப்பதும், முழு மத்திய கிழக்கையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும்தான். எனவே பலஸ்தீன மக்கள் அவர்களின் கபட நோக்கங்களைப் புரிந்து கொண்டு, உண்மையான சர்வதேச நண்பர்களின் ஆதரவுடன், தமது சொந்தக் காலில் நின்று போராடுவதே வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கான ஒரே மார்க்கமாகும்.

*

---

இந்த உலகை மாற்றியமைக்கமுடியும், மாற்றம் தவிர்க்கமுடியாதது என்னும் வாதத்தை எதிர்ப்பவர்கள், பழைமைவாதிகள். இவர்கள் மாற்றத்தை விரும்பாதவர்கள். தற்போது நிலவிவரும் சூழலில் இருந்து ஆதாயம் பெறுபவர்கள். நிலவும் சூழலை மாற்றவேண்டுமானால், அந்தச் சூழலை ஆதரிப்பவர்களை எதிர்க்கவேண்டும். சமூகம் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டுமானால், முன்னேற்றத்துக்குத் தடை விதிக்கும் சமூக விரோதிகள் எதிர்க்கப்படவேண்டும். எனவேதான், ஒரு நிலையை மறுத்து இன்னொரு நிலை உருவாகவேண்டும்.

- ஹெகல்

# கர்நாடக இசையின் மூலவேர் தமிழிசையே!

**அ.மார்க்ஸ்**

ஏடறிந்த காலந்தொட்டு தமிழர்கள் இசை குறித்த நுணுக்கமான அறிவுடையவர்களாக இருந்தனர் என்பதற்கு நமது இலக்கியங்கள் உறுதியான சான்று பகர்கின்றன. ஆரிய மொழிப் பண்பாட்டினரிடம் இத்தகைய நுணுக்கமான பதிவுசூள் இல்லை. சாம வேதம் இசை பற்றியது எனக் கூறப்பட்டாலும் நமது தொல்காப்பியம், சிலம்பு, சிந்தாமணி, பெருங்கதை, உரை இலக்கியங்கள் முதலானவற்றில் காணப்படும் நுணுக்கத்துடன் அதில் பதிவுகள் கிடையாது. தவிரவும் வேதம் ஓதுதலும் (Chanting) இசைத்தலும் ஒன்றன்று. தமிழிலிருந்தே திராவிட மொழிகள் அனைத்தும் கிளைத்தன. இவ்வகையில் திராவிடர்களின், தென்னிந்தியர்களின் முதுசொம் ஆக, மூலச்சொத்தாக வளமான தமிழிசை அமைகிறது.

தமிழைப் போலவே தமிழிசைக்கும் 2500 ஆண்டுகால இடையறாத தொடர்ச்சி உண்டு. பக்தி இலக்கியங்கள் இசையால் தமிழ் வளர்த்தன. விஜயநகர, நாயக்க, மராட்டிய ஆட்சிகளுக்குத் தமிழகம் உட்பட்டபோது தெலுங்கு மற்றும் வடமொழிச் சார்புடையதாக நமது இசை ஆக்கப்பட்டது. தென்னக இசை மரபை 'கர்நாட', 'தேச' இசை மரபுகளாக வகுத்துக் கொள்ளும் முறை விஜயநகர ஆட்சிக் காலத்தில் இருந்ததை அக்கால சமூக வரலாற்றை எழுதிய டி.வி.மகாலிங்கம் முதலானோர் குறிப்பிடுகின்றனர் தமிழிசையின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு பண்டைத் தமிழ் பண்களுக்கெல்லாம் வடமொழியில் ராகப் பெயர்கள் இடப்பட்டன.

மருத்துவம், விவசாயம், இசை எனப் பல துறைகளிலும் அறிஞராகவும், விஞ்ஞானியாகவும் விளங்கிய தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடாத்திய இசை மாநாடுகள் குறித்த செய்திகளை நூலில் காண்க. 1917ல் பண்டிதரின் 'கருணமிர்தசாகரம்' என்கிற தமிழிசை குறித்த மகத்தான படைப்பு வெளிவருகிறது. 1947ல் விபுலானந்தரின் யாழ் நூல். 1941ல் அண்ணாமலை நகரில் தமிழிசை இயக்க மாநாடு. 1943ல் சென்னைத் தமிழிசைச் சங்கம் என்பதாகச் செயற்பாடுகள் தொடர்கின்றன.

இங்கொன்றை நினைவுபடுத்திக் கொள்வது முக்கியம். இன்று கர்நாடக இசையாக உருப்பெற்றிருப்பது பண்டைத் தமிழ் இசையே என்பதை நிறுவிய தமிழிசை இயக்கம், கர்நாடக இசைக் கச்சேரிகளில் தமிழில் பாடவேண்டும் எனத் தொடங்கப்பட்ட தமிழ்ப்பாட்டு இயக்கமும் வேறு வேறு. "தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீண்டும் மீண்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி (தேசிய இனம்-அ.மா) சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரும்" எனப் பாரதி சொன்னார்.



பண்டிதர் தொடங்கிய முயற்சியின் விளைவாக இன்றைய கர்நாடக இசையின் மூலாதாரம் பண்டைத் தமிழிசையே என்பது அய்யமின்றி உறுதி செய்யப்பட்டது. பண்டை இலக்கியங்களில் பதிந்துள்ள இசை நுணுக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. இன்றைய சுரக் குறியீடுகள், ராகங்கள் ஆகியவற்றின் மூலத் தமிழ் வடிவங்கள் கண்டறியப்பட்டன. தமிழர்களின் இசைக் கருவிகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்று கர்நாடக இசையாக இருப்பதன் மூல வடிவம் தமிழிலக்கியங்களில் காணப்படும் தமிழிசையே என்பதை யாரும் மறுக்க இயலாது. ஆனாலும் இன்று கர்நாடக இசையாகப் பயிலப்படுவது பல மாற்றங்களைத் தனக்குள் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலை இசை, இந்துஸ்தானி இசை, பாரசீக இசை ஆகியவற்றின் தாக்கங்கள் இதிலுண்டு. மும்மூர்த்திகள் எனப்படுவோர் சில கீர்த்தனைகளை மேலை மெட்டுகளிலும் கூட இயற்றியுள்ளனர். இந்த வேறுபாடுகளை மனதிற் கொண்டு நிலவும் இசையைக் கர்நாடக இசை அல்லது தென்னந்திய இசை என்றே சொல்லிவிட்டால்தான் என்ன?

நமது இசையின் தொன்மையையும் மூலாதாரத் தன்மையையும் நிறுவியாகிவிட்டது. இன்றைய ராகங்களின் மூல வேர்களெல்லாம் இனங்காணப்பட்டு விட்டன. நமது இசையின் தேக்கத்தைப் பற்றியும், நவீன யுகத்திற்கும் தொழில் நுட்பங்களுக்கும் ஏற்ப அதை மாற்றியமைப்பது பற்றியும் நாம் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்பதே எனது ஆதங்கம்.

- நா.மம்மது என்பவர் எழுதிய 'தமிழிசை வேர்கள்' என்ற நூலுக்கு அ.மார்க்ஸ் எழுதிய நீண்டதொரு முன்னுரையின் சில முக்கியமான பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன.

# ஐரோப்பிய வலய நாடுகளுக்குள் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம்!



உலகப்பொருளாதாரம் அதிமோசமான அழிவின் விளிம்பிலிருப்பதாகவும், அப்படியொரு வீழ்ச்சி வருமானால் சமூகக்கொந்தளிப்பு வருமென்று ஐ.நா. நிறுவனத்தின் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எட்டுக்கோடி புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்றும் ஆனால் அதில் பாதியளவே பூர்த்தியாக்கப்படும் என்றும் தெரிவிக்கிறது.

இவ்வலய நாடுகளில் காணப்படும் இருபத்தைந்து வயதிற்குக்கீழ்ப்பட்ட வேலையில்லாதவர்களின் புள்ளிவிபரம் பின்வருமாறு.

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| ஸ்பெயின் | 45.7% |
| கிரேக்கம் | 38.5% |
| ஸ்லோவாக்கியா | 33.3% |
| இத்தாலி | 27.8% |
| அயர்லாந்து | 26.9% |
| போர்த்துக்கல் | 26.8% |
| பிரான்ஸ் | 22.8% |
| பிரித்தானியா | 19.6% |
| ஜேர்மனி | 9.1% |
| நெதர்லாந்து | 7.1% |

இவ்விபரங்கள் ஜேர்மனியிலிருந்து வெளியாகும் ஒரு தொழிற்சங்கப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டவை.

இவ்விடத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஓய்வூதியவயதெல்லை நீடிப்பையும் ஒப்புநோக்குக.

**ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும் முக்கியநாடுகளின் ஓய்வூதிய வயதெல்லைகள்.**

| நாடுகள் | தற்போது ஆண்கள் | தற்போது பெண்கள் | 2020 ஆண்டிலிருந்து |
|---|---|---|---|
| பிரித்தானியா | 65 | 60 | 66 |
| ஜேர்மனி | 65 | 65 | 67 |
| பிரான்ஸ் | 60 | 60 | 62 |
| இத்தாலி | 65 | 60 | |
| நெதர்லாந்து | 65 | 65 | 67 |
| கிரேக்கம் | 65 | 60 | 65 |
| போர்த்துக்கல் | 65 | 65 | |
| அயர்லாந்து | 65 | 65 | 68 |
| டென்மார்க் | 65 | 65 | 67 |
| ஸ்பெயின் | 65 | 65 | |

ஐரோப்பிய அரசாங்கங்கள், இளைஞர்கள் உட்பட பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பில்லாத, வேலையிழந்த நிலையிலிருக்கும்போது ஓய்வூதிய வயது எல்லையை நீடித்திருக்கிறது.
வேலைத்தளங்களிலோ பல நிறுவனங்கள் (இதில் பெரிய நிறுவனங்கள் தவிர்த்து) அடிமாட்டுச் சம்பளத்திற்கு குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் போட்டுப் பிழிந்தெடுக்கின்றன. பிரித்தானியாவோ நிர்ணயிக்கப்பட்ட வயதெல்லையையும் தாண்டி,

‘இரத்தம் சிந்தி, போராடுவோம். அச்சமில்லாமல் எதிரியின் கண்களை உற்று நோக்குவோம். இறுதிவரை விட்டுக்கொடுக்காமல் நடைபோடுவோம். ஒரு மாபெரும் யுத்தம் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. வெற்றி நமக்குத்தான் கிடைக்கவேண்டும்.’

- எங்கெல்ஸ்

‘போராடும் பாட்டாளி வர்க்கம் தன் கையையே தனக்கு உதவியாகக் கொள்ளும்.’ மேலும், ‘தங்களது விடுதலை சோசலிசத்தில் மட்டுமே உள்ளது’ என்பதை தொழிலாளர்கள் உணர்ந்து கொள்வார்கள். அவர்களுடைய அரசியல் இயக்கம் இந்த எண்ணத்தை வலுப்படுத்துவதாக இருக்கும்

- லெனின்

விரும்பியோர் வேலைசெய்யலாமென்று சலுகைத்தோரணையில் அறிவிப்பு வேறு செய்கிறது. ஓய்வூதியம் கொடுப்பதற்கு அதுவும், தொழிலாளர்களின் உழைப்புக்காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகையை திருப்பி வழங்குவதற்கே திணறுகின்றன. பணமில்லாத வங்குரோத்து (Bankrupt) நிலைமையையே காரணமாக இவ்வரசுகள் காட்டுகின்றன.

அமெரிக்காவிலோ, நாசாவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையையே குறைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அங்கு பத்துப்பேர்களில் ஒருவருக்கு வேலையில்லை. பழம்பெரும் பன்னாட்டு முதலீட்டு வங்கிகள் மூடப்பட்டு வருகின்றன. அதன் தேசியக்கடனோ 13 Trillion டொலர்கள். வளர்ச்சியடைந்த நாடுகளெல்லாம் இன்று, பிச்சைப்பாத்திரம் ஏந்தி சீனாவின் கதவைத்தட்டுகின்றன. உலகில் சனத்தொகை கூடிய ஒரு நாடு ஆண்டியாகாமைக்கும், வளர்ச்சியடைந்த நாடுகள் ஆண்டியாகிக்கொண்டிருப்பதற்கும், அவற்றின் பொருளாதார அமைப்பு முறையும் திட்டங்களுமே காரணம். வளர்ச்சியடைந்த நாடுகளின் திட்டங்கள் சுரண்டலைத் தக்கவைத்துக்கொள்ளும், அதிகாரத்தைத்தக்க வைத்துக்கொள்ளும் நிறுவனங்களின் நலன்கள் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. மக்கள் நலன், தொழிலாளர் நலன் சாராத திட்டங்களாகவே காணப்படுகின்றன. இன்று பரவலாகப் பேசப்படும் சிக்கனத்திட்டம். (austerity Packet) மக்களின் சாதாரண வாழ்க்கைத்தரத்தையே நிலைகுலைய வைக்கிறது.

தொழிலாளர்களுக்கும், அரச உத்தியோகஸ்தர்களுக்குமான அடிப்படைச் சம்பளக்குறைப்பு, வருடாவருட சம்பள உயர்வில்லை, இலாபத்திலிருந்து கிடைக்கும் இனாம் (Bonus) இல்லை,குறைந்தவருமானம் உள்ளவர்களுக்கும் வரி அறிமுகப்படுத்தல், (சீனாவில் மாதம் 550 டொலர்களுக்கும் குறைவான வருமானம் பெறுபவர்கள் வரிகட்டவேண்டியதில்லை.) வரி உச்சவரம்புக்குரிய வருமானத்தைக்குறைத்தல் போன்ற இன்னோரன்ன மக்கள்விரோத திட்டங்களை எதிர்த்தே இன்று அமெரிக்காவின் Wallstreet இலிருந்து ஐரோப்பிய நகரங்கள்வரை இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள். இவ்வரசுகள் தமது அமைப்புமுறையை, திட்டங்களை மாற்றாதவரை இவ்வார்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக நிகழுமென்பதே நிதர்சனம்.

*“ஏழைகளும் செல்வந்தர்களும் இருவேறாகப்பிரிந்து கிடக்கின்றனர். இவர்களுக்குள் ஓயாமல் போர் நடந்து கொண்டிருக்கிறது. ஒன்று சுரண்டலுக்கான போர், வசதிகளையும், அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்வதற்கானபோர். மற்றொன்று உரிமைக்கான போர். உயிர்மீட்புக்கான போர். சமத்துவத்துக்கான சுரண்டலற்ற சமூகத்திற்கான போர்”*
*- எங்கெல்ஸ்*

**- தங்கன்**

*

16ம் பக்கத்தொடர்ச்சி……..

தோழர் சிவதாசன் தான் மரணிக்கும்வரை, தனது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் வரித்துக்கொண்ட இடதுசாரி – முற்போக்குக் கொள்கையையே இறுதிவரை உறுதியுடன் கடைப்பிடித்தார். எப்பொழுதும் கட்சித் தோழர்களுடனும், சுரண்டப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுடனும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தார். அவரது மறைவு அனைத்து முற்போக்கு சக்திகளுக்கும், உழைக்கும் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

*

‘டார்வினின் கண்டுபிடிப்புகளில் உள்ள முக்கியத்துவத்தை முதல் முதலாகப் புரிந்துகொண்டவர் மார்க்ஸ். 1859ம் ஆண்டுக்கு முன்னரே, டார்வினின் முக்கியத்துவத்தை அவர் அறிந்துவைத்திருந்தார். டார்வின் தன் கொள்கையை பொதுவெளியில் சமர்ப்பித்தபோது, மாதக்கணக்கில் மக்கள் அவர் அளித்த புரட்சிகர அறிவியல் சக்தியைப் பற்றியே விவாதித்தார்கள். மார்க்ஸ், டார்வினின் படைப்பை அரைமனத்துடன்தான் ஏற்றார் என்றும் அதன் மீது பொறாமை கொண்டிருந்தார் என்றும் பேசுபவர்களுக்கு நான் அழுத்தமான மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.’

- Wilhelm Liebknecht (ஜெர்மன் எழுத்தாளர்)

முன்பக்கத்தொடர்ச்சி...

ஆனாலும் கொரியாவிலும், வியட்நாமிலும், ஈராக்கிலும், லிபியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் நடந்த போர்க்குற்ற மீறல்கள் குறித்து, இந்த 'சர்வதேச சமூகம்' எந்தவிதமான கேள்வியும் எழுப்பியதாகத் தெரியவில்லை. அவை எல்லாம் கிணற்றில் போட்ட கல்லாக மாறிவிட்டன. அதற்கொரு காரணம் அந்தப் போர்களில் இந்த சர்வதேச சமூகம் சம்பந்தப்பட்டிருந்ததுதான்.

இலங்கையைப் பொறுத்தவரையிலும்கூட, இந்தப் போர் 30 ஆண்டுகளாக நடந்து வந்திருக்கிறது. புலிப் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தப் போரைக் கொண்டு நடாத்துவதற்காக, இலங்கை அரசுக்கு மேற்கு நாடுகள் உட்பட பல சர்வதேச நாடுகள் தொடர்ந்து உதவியும் வந்துள்ளன. அதேநேரத்தில் இந்த நாடுகளிலுள்ள சில சர்வதேச சக்திகள் புலிகளுக்கும் பலவழிகளில் உதவி வந்துள்ளன. குறிப்பாகப் பல மேற்கு நாடுகளில், புலிகள் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட பின்னரும்கூட, நிதி திரட்டுவது, தமக்கு எதிர்ப்பானவர்களை மிரட்டுவது, பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். இன்றும்கூட பல்லியின் அறுந்த வால் துடிப்பதுபோல், இந்த நாடுகளில் புலிகள் செயல்பட்டு வருகின்றனர். அப்படிப் பார்த்தால் இது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலையல்லாமல் வேறு என்ன?

புலிகளின் ஈவிரக்கமற்ற செயல்பாடுகளால்தான், முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப் போரின்போது பொதுமக்கள் கொல்லப்பட வேண்டிய நிலைமை உருவானது என்பதை இந்த சர்வதேச சமூகம் நன்கறியும். இந்த இறுதிப் போர் திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. புலிகள் எப்போது மாவிலாறு அணைக்கட்டை ஈவிரக்கமில்லாமல் மூடி, பல்லாயிரக்கணக்கான அப்பாவி விவசாயிகளின் வயிற்றில் கைவைத்தார்களோ அன்றே அது ஆரம்பித்துவிட்டது. அங்கிருந்து ஆரம்பித்த புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கை, முதலில் கிழக்கு மாகாணத்தை விடுவிப்பதில் நிறைவு பெற்றது. அங்கு புலிகள் பொதுமக்களை தமக்கு பாதுகாப்பு கேடயங்களாக மாற்ற முடியாமல் போனதால், பொதுமக்களுக்கு பெரிய இழப்புகள் ஏதுமின்றி அரசாங்கம் அந்தப் பகுதி மக்களை விடுதலை செய்தது.

அதன்பின்னர் மன்னார், கிளிநொச்சி மாவட்டங்கள் விடுவிக்கப்பட்ட போதும் புலிகள் பின்வாங்கி ஓடிக்கொண்டு இருந்ததால், பொதுமக்களுக்கு பெரும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. இந்த இராணுவ நடவடிக்கைகள் எல்லாம் நடைபெற்றபோது, இந்த சர்வதேச சமூகம் என்பது வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தது. அவர்கள் நினைத்திருந்தால், போரில் ஈடுபட்ட இருதரப்பின் மீதும் கடுமையான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, குறைந்த பட்சம் ஒரு போர் நிறுத்தத்தைத் தன்னும் உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாதது மட்டுமின்றி, புலிகள் தாம் போரில் வெற்றிபெற முடியாது அழியப் போகிறோம் என்று தெரிந்த பின்னும், பொதுமக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்தபோதும் கூட அவை மௌனமாகவே கைகட்டிப் பார்த்திருந்தன.

உண்மையென்னவென்றால், இந்தப் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் ஏதோவொரு வகையில் ஊக்குவித்து வந்த இந்த சர்வதேச சக்திகள், பல நாடுகளில் செய்ததுபோல, இலங்கையிலும் போர் முடிவதை விரும்பவில்லை. 'ஊர் இரண்டுபட்டால் தானே கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.' அத்துடன் புலிகளின் கடந்தகால இராணுவ வெற்றிகளில் அதீதமான நம்பிக்கை கொண்டிருந்த இச்தச் சக்திகள், புலிகள் எப்படியும் இராணுவத்தின் சுற்றிவளைப்பை உடைத்துக்கொண்டு மீண்டுவிடுவார்கள் என்றே நம்பியிருந்தார்கள். ஆனால் நிலைமை தலைகீழாக மாறி, புலிகளை அரசாங்கம் முற்றுமுழுதாக ஒழித்துக்கட்டிய பின், முதலில் செயவதறியாது திகைத்து நின்ற அவர்கள், பின்னர் அரசாங்கம் இழைத்த போர்க் குற்றங்கள் பற்றி கோஸ்டி சேர்ந்து பேசத் தொடங்கி, அதை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் நடவடிக்கையிலும் இறங்கினர். ஆனால் அது பெரிய வெற்றி எதனையும் பெறவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், அரசாங்கம் தனது பக்கக் கடமையாக இறுதி யுத்த சம்பவங்கள் பற்றி விசாரணை நடாத்தியுள்ளதுடன், அதன் அடிப்படையில் நடவடிக்கையும் மேற்கொள்வதாக அறிவித்துள்ளது. ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன், தருஸ்மன் என்பவர் தலைமையில் நியமித்த ஆலாசனைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், இலங்கை அரசு மீது மட்டுமன்றி புலிகள் மீதும் போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தது. அரசாங்கத்தின் அறிக்கை வந்துவிட்ட சூழலில், புலிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து யாரிடமிருந்து ஐ.நா அறிக்கை கோரப்போகின்றது? புலிகள் பக்க விசாரணை அறிக்கை வராவிடின், இந்தப் போர்க் குற்ற விசாரணைகள் பூர்த்தியடையப் போவதில்லை. எனவே அதுசம்பந்தமாக ஐ.நாவும் சர்வதேச சமூகமும் என்ன செய்யப் போகின்றன?

தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க...

# உறுதிகுலையாத தோழர் சிவதாசன் மறைவு!

நீண்டகால இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளரும், தொழிற்சங்கத் தலைவருமான தோழர் எஸ்.சிவதாசன் அவர்கள், 2011 நவம்பர் 13ம் திகதி தமது 77வது வயதில் காலமான செய்தி கேட்டு, அனைத்து முற்போக்கு சகதிகளும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

தோழர் சிவதாசன் தனது மாணவப் பருவத்திலேயே இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, அவர் அந்த இயக்கத்தின் கொள்கைகளில் நிலை தழும்பாது நின்று வந்துள்ளார். தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைந்து, அது ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்த காலகட்டத்தில், அவர் சில முற்போக்குத் தமிழ் தேசியவாத இயக்கங்களுடன் தன்னை இணைத்து வேலை செய்தாராயினும், அங்கும் தமது இடதுசாரிக் கொள்கைகளைக் கைவிட்டுவிடவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க இயக்கத்தில் அவர் ஆற்றிய பங்குபணி மகத்தானதாகும். திரிகோணமலையில் அவர் தொழிற்சங்கப் பிரதிநிதியாக இருந்த காலத்தில், அங்கு துறைமுகத் தொழிலாளர்களை அமைப்புரீதியாகத் திரட்டுவதிலும், அவர்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும் முக்கியமான பங்களிப்பை வழங்கினார். அக்காலகட்டத்தில், அங்கு கட்சி மற்றும் சமூகப் பணிகளையும் முன்னெடுத்தார்.

அதன்பின்னர், அவர் 1960களின் நடுக்கூறில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தொழிற்சங்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பின்னர், வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபை, காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, வல்லை நெசவாலை, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை போன்ற இடங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்த கட்சியின் தொழிற்சங்க அமைப்புகளை மேலும் பலப்படுத்தியதுடன், அங்கு நடைபெற்ற வெற்றிகரமான தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு சிறப்பான முறையில் தலைமைத்துவமும் வழங்கினார். தொழிலாளர்களின் பிரச்சினைகளின் பொருட்டு தொழில் நீதிமன்றங்களிலும் சிறப்பாக வாதிட்டார்.

அத்துடன் நின்றுவிடாது, அக்காலகட்டத்தில் கட்சியால் வட பகுதியெங்கும் பரந்த அளவிலும் தீவிரமாகவும் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கெதிரான போராட்டங்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார். விவசாயப் பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்களிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்.



தோழர் சிவதாசன்

அவரது மக்கள் நலச் செயற்பாடு காரணமாக பாசிசப் புலிகளால் ஒருமுறை கைதுசெய்யப்பட்டு, பல மாதங்கள் சித்திரவதை செய்யப்பட்டார். பின்னர் அவர் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த காலத்திலும், அவர் பயணித்த வாகனத்தில் புலிகள் குண்டு வைத்ததால், பலத்த காயங்களுக்கு உள்ளாகி மயிரிழையில் உயிர்தப்பினார்.

தமிழ் – சிங்களம் – ஆங்கிலம் என மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த தோழர் சிவதாசன், கட்சிப் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் என்பனவற்றில் சிறந்த சமகால மொழிபெயர்ப்பாளராச் செயலாற்றியுள்ளார். சில வருடங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியபோது, அங்கும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார்.

இனப்பிரச்சினை கூர்மையடைந்த காலத்தில், ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து பணியாற்றிய தோழர் சிவதாசன், வட கிழக்கு மாகாணசபையின் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னுடன் இணைந்து பணியாற்றிய தோழர் கதிரவேலு அவர்களின் புதல்வர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி கட்சியை உருவாக்கிய போது தன்னை அதனுடன் இணைத்துக் கொண்டார். அக்கட்சியின் சார்பாக இரு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...